## <u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.229/2016</u>** **தேதி.** 17.06.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. சுகன்யா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. பி.வ.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 17.06.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.பஜலுல்லா காதிரி |
| த/பெ. | திரு. |
| வயது | /2026 |

**சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.**

**பி.வா.சா.1** வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. வாதியின் ஆற்காடை சேர்ந்த அன்பு முதலியாரின் மகன் என்றால் சரிதான், வாதியின் தந்தை ஆற்காட்டில் மின்னனுசாதனங்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் விற்பனை செய்யும் நான்கு கடைகள் நடத்தி வந்தார் என்றாலும் அவருடன் வாதியும் அவரது சகோதரரும் சேர்ந்து வியாபாரம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரிதான். வாதியின் கடை சுமார் 40 ஆண்டுகளாக ஆற்காட்டின் மையப்பகுதியில் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 2 முதல் 4 வரையிலானவர்கள் எனது தம்பி மற்றும் தங்கைகள் ஆவார்கள். பிரதிவாதிகளாகிய நாங்கள் சேர்ந்து வாதி மற்றும் அவரது சகோதர சகோதரிகளுக்கு எதிராக அசல் வழக்கு 14/2016 என்ற வழக்கை ஆற்காடு மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு மேலும் 14 நபர்களுக்கு மேலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கானது சர்வே எண்கள் 64/1, 64/3, 49/2, 46/3A, 65/3 ஆகிய சொத்துக்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அந்த வழக்கில் B அட்டவணை சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. 08.03.2016 ல் நான் தினத்தந்தி நாளிதழில் எனது வழக்கறிஞர் மூலமாக பொது விளம்பரம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த விளம்பரம்தான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். அந்த விளம்பரத்தில் மேற்கண்ட சர்வே எண்கள் அனைத்தையும் குறிப்பிடாமல் மூன்று சர்வே எண்கள் மட்டும் குறிப்பிட்டேன் என்றால் சரிதான். அந்த விளம்பர்த்தில், "போலி பத்திரங்கள் மூலம் உரிமம் கொண்டாடும் A.பார்த்தசாரதி த/பெ.அன்பு முதலியார்" என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். அதே விளம்பரத்தில் வாதிக்கு எதிராக கிரிமினல் நடவடிக்கை எடுக்க இருப்பதாக என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். அந்த விளம்பரம் கொடுப்பதற்க்கு முன்பு வாதியிடம் என்னென்ன ஆவணங்கள் உள்ளன என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. வாதியிடம் என்னென்ன ஆவணங்கள் உள்ளன என்பது எனக்கு தெரியாது என்பதால் வாதியிடம் உள்ள ஆவணங்கள் உண்மையானதா அல்லது போலியானதா என்று என்னால் சொல்லமுடியாது என்றால், எனது வழக்கறிஞர் பார்த்தார். எனது வழக்கறிஞர் என்னென்ன ஆவணங்கள் பார்த்தேன் என்று கூறினார் என்றால் இல்லை.

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in open
court, read over / intarpreted is the
witness and Acknowleged by
him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.